# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

12th FEBRUARY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 14






கோத்தாவின் ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவதற்கு சதி செய்தாரா பசில்?

05

முஸ்லிம் ஆண்கள் பர்தாவோடு புலிகளை காட்டிக்கொடுத்தார்கள்

07

# மேலும் உடையும் சுதந்திர கட்சி



சிறிலங்கா சுதந்திர கட்சி இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒட்டி இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் 95 ஆசனங்களை பெற்றிருந்த சு.க.2020 நாடாளுமன்றத் தேர்தலில் 14 ஆசனங்களை மாத்திரமே பெற்றன.

அவர்களுள் 9 பேர் ரணில் ஜனாதிபதியானதும் ரணிலின் அரசில் இணைந்துகொண்டனர்.5 எம்பிக்களே எஞ்சியுள்ளனர்..

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்களின்போது கட்சிக்குள் ஏற்பட்ட

02



# மக்களுடன் வீதிக்கு இறங்குவோம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களை திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்போவதாக ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

எப்படியாவது இந்தத் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என்பதில் இந்த அரசு குறியாகவே இருக்கிறது. அதற்காக இதுவரை பல காரணங்களை கூறி வந்தது. இறுதியாக பணம் இல்லை என்று கூறி வருகிறது.

தேவையற்ற விடயங்களுக்கு அதிக பணத்தை செலவு

02

# 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்



நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக தினமும் மக்கள் தொழில் நிமிர்த்தம் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

அவர்களுள் இந்த நாட்டின் சொத்துக்களான அதிக எண்ணிக்கையிலான கல்விமான்கள் அடங்குகின்றனர்.

அவர்களுள் வைத்தியர்களும் அடங்குகின்றனர்.இப்போதுவரை 500 வைத்தியர்கள் இவ்வாறு வெளியேறியுள்ளனர்.

சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் புதிய வரி காரணமாகவே இவர்கள் வெளியேறி வருகின்றனர் என்று அறிய முடிகிறது.

இந்த எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.அவ்வாறு கூடினால் சுகாதாரத் துறையை கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.








# உணவு கேட்டு எம்பிக்களுக்கு மக்கள் தொலைபேசி அழைப்பு

நாட்டின் பொருளாதார நிலைமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது என்று அரச தரப்பு கூறி வருகின்றபோதிலும் நடைமுறையில் அப்படி எதையும் காணக்கூடியதாக இல்லை.

மக்கள் உணவுக்காக அலைவதை அறியக்கூடியதாக இருக்கிறது.மக்கள் இப்போது அவர்கள் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பிய எம்பிக்களிடமே உணவு, பணம் ஆகியவற்றைக் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

மக்கள் எம்பிகளுக்கு தொலைபேசி அழைப்புகளை எடுத்து பணம் தாருங்கள், பால் மா தாருங்கள்,உணவு தாருங்கள் என்று கேட்கிறார்களாம்.

எம்பிக்களே இதைத் தெரிவித்துள்ளனர்.எம்பிக்களிடமே உதவி கேட்கும் அளவுக்கு மக்களுக்கு வேறு வழி தெரியவில்லை என்பதுதான் உண்மை.

அதுமட்டுமல்ல,மக்கள் சில எம்பிக்களின் வீடுகளுக்குச் சென்றும் கேட்கிறார்களாம்.கதவோரம் காத்துக்கிடக்கிறார்களாம்.




புது சுடர்
www.puthusudar.lk
2023 FEBRUARY 12 - SUNDAY

# குட்டையைக் குழப்பியது ஏன்?

பொருளாதார பிரச்சினை ஒரு பக்கம்.அரசியல் தீர்வு பிரச்சினை மறு பக்கம்.இப்படி இரண்டையும் சம நேரத்தில் சுமந்துகொண்டு பயணிக்கிறது எமது நாடு.இந்த இரண்டு பிரச்சினைகளும் தற்போது தேவையின்றி கிளப்பட்டதுதான்.

பொருளாதார பிரச்சினையை கிளப்பிவிட்டவர் முன்னாள் ஜனாதிபதி-ஜனாதிபதி பதவியை விட்டோடிய கோத்தாபய ராஜபக்ஸ.

அரசியல் பிரச்சினையைக் கிளப்பிவிட்டவர் கோத்தாபய ராஜபக்ஸ வின் இடத்துக்கு வந்த-பொருளாதார பிரச்சினையை தீர்க்கப் போவதாகக் கூறிக்கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

அரசியல் தீர்வு பிரச்சினை என்பது இன்று நேற்றுத் தோன்றியது அல்ல. அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்-தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

ஆனால், நாட்டில் பொருளாதார பிரச்சினை தலைதூக்கியதால் அரசியல் தீர்வு பிரச்சினையை சற்று ஒத்திப்போட்டிருந்தனர் தமிழர்கள். உடனடி பிரச்சினை-முக்கிய பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை என்பதால். அது வயிற்றுப் பசியுடன் தொடர்புபட்ட பிரச்சினை என்பதால் எல்லோரும் அந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கே முன்னுரிமை கொடுத்தனர்.

நாட்டு மக்கள் பட்டினியில் வாடும்போது அரசியல் தீர்வு போன்ற பிரச்சினை களைத் தூக்கிப் போட்டால் அவை எடுபடா என்பதால் தமிழர்களும் சேர்ந்தே பொருளாதார பிரச்சினைக் கான தீர்வைத் தேடி போராடினர். காலிமுகத் திடல் போராட்டக் களத்தில் தமிழர்களும்தான் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் விளைவாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ விரட்டப்பட்டார்.அவரது இடத்துக்கு வந்த ரணில் விக்ரமசிங்க தமிழர்கள் எதிர்பார்த்திடாத தருணத்தில் அரசியல் தீர்வுபற்றிய அறிவிப்பை விடுத்தார்.

அவரே தானாக முன்வரும்போது அதை விடுவார்களால் தமிழர்கள். அவர்களும் ஆர்வம் காட்டினார்கள். தமிழர் தரப்பை அழைத்து -தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை அழைத்து பேசினார் ஜனாதிபதி .பல தடவைகள் பேசினார். ஏனைய கட்சிகளையும் அழைத்துப் பேசினார்.

இலங்கை வந்து சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் தீர்வை வலியுறுத்தி விட்டுச் சென்றார்.

அதன் பின்தான் இந்த அரசியல் தீர்வு விவகாரத்தை விரைவு படுத்தினார் ரணில். ஜெய்சங்கர் வந்து போன மறுநாளே தமிழர் தரப்பை அழைத்துப் பேசினார்.

சுதந்திர தினத்துக்கு முன் தீர்வைத் தருவேன்.பொலிஸ் அதிகாரங்களைத்தான் தருவேன் என்றெல்லாம் கூறி இப்போது நாட்டில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பௌத்த தேரர்கள் வீதிக்கு இறங்கி இந்தத் தீர்வு முயற்சிக்கு எதிராகப் போராடும் நிலையைத் தோற்றுவித் துள்ளார் ரணில்.

உண்மையில் ரணிலின் திட்டம்தான் என்ன?

பொருளாதார பிரச்சினை யைத் தீர்க்க வேண்டிய சூழ்நிலையில் அரசியல் தீர்வு பிரச்சினையை அவர் இழுத்துப் போட்டது ஏன்? இந்தியாவை வளைத்துப்போடுவதற்காகவா?

imf கடன் உதவியை பெற வேண்டுமென்றால் இலங்கை இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து பெற்ற கடனை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். அதற்காக இந்தியாவை வளைத்துப்போட வேண்டிய தேவை இலங்கைக்கு உண்டு.அந்த வளைப்புதான் இந்த அரசியல் தீர்வு முயற்சியா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு ஒட்டுமொத்த தமிழர்களின் வாக்குகளை சுருட்டும் திட்டமா? அல்லது பொருளாதார பிரச்சினையை மறக்க வைப்பதற்கான வியூகமா?

இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன. எது எப்படியோ ரணில் குட்டையை குழப்பிவிட்டார். நாட்டில் ஒரு சலசலப்பை ஏற்படுத்திவிட்டார்.இதனை வைத்துக்கொண்டு அவர் எதையோ செய்யப்போகிறார்.இலாபம் ஒன்றை அடைவதற்கு அடி போடுகிறார் என்றுமட்டும் தெரிகிறது.



# மத்தியஸ்தமும் இளைய தலைமுறையும்

## மத்தியஸ்தம் என்றால் என்ன?

“மத்தியஸ்தம்“ என்ற சொல்லின் நேரடிப் பொருள் ஒரு உடன்பாட்டிற்கு வருவது என்பதாகும். பிணக்குகளை உரையாடல் மூலம் தீர்த்து வைப்பதே மத்தியஸ்தத்தின் முக்கிய நோக்கமாகும். இதில் பங்குபெறும் மதியஸ்தர்கள் பக்கச்சார்பற்றவர்கள், அவர்கள் எந்தத் தரப்பினருக்கும் சார்பானவர்கள் அல்ல. மேலும், எந்தவொரு பிணக்குத் தொடர்பாகவும் அவர்கள் முன்கூட்டியே முடிவுகளைத் தீர்மானிப்பதில்லை.

மோதலுக்கான மூலக் காரணத்திற்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையிலான தொடர்பு.இளைய சந்ததியினருக்கு “பிணக்குகள்“ பற்றிய விழிப்புணர்வு என்பது தற்போதைய சமூகத்தில் வாழ்வதற்கும் மிகவும் அவசியமான ஒன்று. சமூகம் பெரும்பாலும் ஒரு பிணக்கினை இரு தரப்பினருக்கு இடையில் இடம்பெறும் தர்க்கமாகவே அடையாளம் காட்டுகின்றது. ஆனால் பிணக்கு என்ற சொல் பரந்த கருத்தினைக் கொண்டது.இளம் தலைமுறையினர் பிணக்கின் தன்மையைப் புரிந்துகொள்வதில் ‘வேறுபாடு’என்ற காரணியைக் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

கல்வியின் முக்கியக் குறிக்கோள் மற்றும் உணர்வு சார்ந்த நிர்வாகம்

தொழில் ஒன்றைப் பெற்று வாழ்வை நிலைநிறுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட இலங்கையின் கல்வித் துறையில், கல்வியின் அத்தியாவசிய அடிப்படைப் பணிகளின் அளவு மிகவும் அரிதாகவே உள்ளன.

அதுதான் மன உணர்வுகளை நிர்வகித்தல்.எதிர்காலத்தில் பொறியாளர், மருத்துவர், போன்ற தொழில் முறை நிபுணத்துவம் வாய்ந்த இலக்குகளை மட்டுமே கொண்ட சமூகத்தில், ஒரே கட்டமைப்பில் சிக்கி வாழ வேண்டிய நிலை காரணமாக இளம் தலைமுறையினரின் சமூக ஆளுமை மழுங்கடிக்கப்படுகின்றது.

மேலும், பாடசாலைக் காலத்திலேயே துன்பம், வலி, மகிழ்ச்சி, உற்சாகம், கோபம் போன்ற எந்த ஒரு உணர்வு பூர்வமான சூழ்நிலையையும் சரியாக நிர்வகிப்பது எப்படி என்பதைக் கற்பிப்பதன் மூலம், பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து வாழ்நாள் முழுவதும் பிணக்குகளை எதிர்கொண்டு அவற்றை வினைத்திறனாக நிர்வகிப்பதற்கு இது பெரும் உதவியாக அமையும்.

இன்றைய காலகட்டத்தினை நோக்கும்போது பல்கலைக்கழக மட்டத்தில் இருந்தும் கூட ஒரு பிணக்கினை நிர்வகிப்பதில் இளைய தலைமுறையினர் நடந்துகொள்ளும் விதம் மிகவும் வருத்தமளிக்கின்றது. சொந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இளைஞர்களின் உணர்வு ரீதியான பலவீனமான நிர்வாங்கம் எதற்கும் பயன்படாத ஒன்றகவே உள்ளது.

## மக்களுடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்கிறது அரசு.வீண் விரயம் செய்கிறது. அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்து பணத்தை வாரி இறைக்கிறது.

ஆனால்,மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்துவதற்கு மட்டும் பணம் இல்லையாம்.

அது பொய்.தேர்தலை ஒத்திப்போடுவதற்காக அரசு இறுதியாக கையில் எடுத்திருக்கும் ஆயுதம் அது.

தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களை திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம். பணத்தை வழங்கும்வரை விடமாட்டோம். என்றார்.

## மேலும் உடையும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**பிரச்சினை காரணமாக அந்த 5 எம்பிக்கள் இரண்டாகப் பிரியும் நிலை ஏற்பட்டுள்ளது என்று உட்கட்சித் தகவல்கள் கூறுகின்றன.**

**மூன்று எம்பிக்கள் ஒரு பக்கமும் இரண்டு எம்பிக்கள் இன்னொரு பக்கமும் செல்வதற்கு வாய்ப்புண்டு என்று சொல்லப்படுகிறது.**





# தமிழ் தலைவர்களே! சமஸ்டி தீர்வை கேட்காதீர்கள்

தமிழ் தலைவர்களிடம் சொல்கிறோம்.தயவு செய்து சமஸ்டி தீர்வைக் கேட்கவேண்டாம்.சமஸ்டிக்கு நாம் எதிப்பு என்று இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார இவ்வாறு கூறினார்.அவர் மேலும் கூறுகையில், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அன்றிருந்து இன்றுவரை கேட்பது அரசியல் தீர்வைத்தான்.ஜனாதிபதி அண்மையில் வடகிற்குச் சென்றபோது தமிழ் மக்கள் அரசியல் தீர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்றும்-நாட்டைப் பிரிப்பதற்கு இடமளிக்கமாட்டாது என்றும் ஜனாதிபதி கூறி வருகின்றபோதிலும் சிலர் ஜனாதிபதிக்கு எதிராக-அரசியல் தீர்வுக்கு எதிராகப் பேசி வருகின்றனர்.

தமிழ் தலைவர்களிடம் சொல்கிறோம். தயவு செய்து சமஸ்டி தீர்வைக் கேட்கவேண்டாம்.சமஸ்டிக்கு நாம் எதிப்பு.

சில தமிழ் தலைவர்கள் உண்மையில் தீர்வை விரும்பவில்லை.தீர்வு கிடைத்துவிட்டால் அவர்களால் அரசியல் செய்ய முடியாது.இதனால்தான் அவர்கள் வழங்கப்பட முடியாத தீர்வை கேட்கின்றனர்.

நாம் ஒற்றையாட்சிக்குள் தீர்வை வழங்கத் தயார்.

அரசு தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

பொருளாதார பிரச்சினை என்று வரும்போது அது இந்த நாட்டுக்கு மட்டும் உரியது அல்ல.முழு நாட்டிலும் உள்ளது.இங்கிலாந்தில்கூட இப்போது வாழ்க்கை செலவீனம் அதிகரித்துள்ளது.

இப்போது எமது நாட்டில் பொருளாதார பிரச்சினை கொஞ்சம் கொஞ்சமாக தீர்ந்துகொண்டு வருகிறது.இந்த வருட இறுதிக்குள் நாம் ஒரு நல்ல நிலைக்கு வந்துவிடுவோம்.மக்கள் சின்ஹா எம்து இந்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.என்றார்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மற்றுமொறு சமூகசேவை பணி






கொழும்பு 05 மங்கள உயனவில் அமைந்துள்ள பாத்திமா சிறுவர்தொண்டு நிறுவனத்திற்கு கற்றலுக்கான உபகரணங்கள் பம்பலப்பிட்டி அமேசன் உயர்கல்வி நிறுவனப்பணிப்பாளர் திரு. இல்ஹாம் மரிக்காரின் ஆலோசனையின் கீழ் வழங்கி வைக்கப்பட்டது .

இந்நிகழ்வில் அமேசன் உயர்கல்வி முகாமையாளர் .மற்றும் ஊழியர்கள் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களுக்கான சிறப்புரை ஒன்றும் திருமதி இல்ஹானா மரிக்காரினால் வழங்கப்பட்டது .மாணவர்கள் அனைவரினதும் பிராத்தனையை பெற்றுக்கொண்டது மன நெகிழ்ச்சியை அளித்தது.

# பசிலின் கட்டுப்பாட்டில் ரணில்!

கோத்தா பதவியை விட்டு ஓடிய பின் இப்போது இவர்கள் ரணிலை ஜனாதிபதியாக்கி இருக்கிறார்கள். அப்படி நியமித்து என்ன பிரயோஜனம்? பசில் அவரை வேலை செய்ய விடுவதில்லை.பசிலின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறார் ரணில்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மாணப்பெரும கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

13ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நாம் எதிர்ப்பில்லை.இப்போதும் 13 நடைமுறையில் உள்ளது.இதை உண்மையில் எதிர்த்தவர்கள் நாம் அல்ல ஜேவிபிதான்.

முதன்முதலாக மாகாண சபையை உருவாக்கும்போது பஸ்கள்,தபால் நிலையங்கள்,தேயிலைத் தோட்டங்கள் போன்றவற்றுக்கு அவர்கள் தீ வைத்தார்கள்.

அறிவாளிகளை-கல்விமான்களை கொலை செய்தார்கள்.

தலதா மாளிகைக்கு குண்டு வைத்தனர்.முதலாவதாக வாக்களிக்கச் சென்றவரை சுட்டுக் கொன்றனர்.

இப்படி எல்லா அநியாயங்களையும் செய்தவர்கள் ஜேவிபிதான்.நாம் 13ஐ அமுல்படுத்தவே சொல்கிறோம். ஆனால்,காணி-பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில்தான் பிரச்சினை இருக்கிறது.இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு தான் நாம் 13 பற்றிப் பேச வேண்டும். ஆனால், இருக்கின்ற அதிகாரத்தைக்கூட வழங்காமல்- மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் பொலிஸ் அதிகாரம் பற்றி ஜனாதிபதி பேசுவது கேலிக்கூத்தாகும்.

சுதந்திர தினத்துக்கு முன் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி கூறி இருந்தார்.எங்கே அந்த தீர்வு?

கோத்தாவை காட்டி-மஹிந்தவைக் காட்டி ஆட்சியைப் பிடித்தார்கள். எதுவுமே செய்ய முடியாத எம்பிக்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தனர்.இதனால்தான் நாட்டுக்கு இப்போது இந்த நிலைமை. பொருளாதார சீரழிவு.

இதுவே சஜித்தின் கையில் கிடைத்திருந்தால் நாட்டை அபிவிருத்தி செய்திருப்பார்.நாடு இந்தளவுக்கு சரிந்திருக்காது.

கோத்தா பதவியை விட்டு ஓடிய பின் இப்போது இவர்கள் ரணிலை ஜனாதிபதியாக்கி இருக்கிறார்கள். அப்படி நியமித்து என்ன பிரயோஜனம்? பசில் அவரை வேலை செய்ய விடுவதில்லை.

பசில் கூறுவதால் அமைச்சர்களை நியமிக்கிறார் ஜனாதிபதி.மக்கள் சாப்பிடக்கூட வழி இல்லாத இந்த நிலையில், இது தேவைதானா?





# ரணில் மறைத்து வைத்திருக்கும் அனுரவின் அந்த ரகசியம் என்ன?

ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கட்சியை விட்டும் நாட்டை விட்டும் ஓடும் அளவுக்கு அவரது ரகசியம் தனத்துக்குத் தெரியும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.என்ன அந்த ரகசியம்? அதை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி எம்பி சமிந்த விஜயசிறி கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

அரசியல் தீர்வு விடயத்தில் இனவாதத்தை -மதவாதத்தை உண்டு பண்ணாத வேலைத்திட்டத்துடன்தான் நாம் பயணிப்போம்.

நாட்டைப் பாதுகாக்கும் நோக்கில் தேர்கள் 2019 இல் வீதிக்கு இறங்கினார்கள்.ஆனால்,ஆட்சியைக் கைப்பற்றும் தேவையாக இருந்தது.

இப்போதும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தேரர்களை மீண்டும் களமிறக்கப்படுகிறார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் கூறினார்.ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எப்போதும் எனக்கு ஏசுபவர்.இன்றும் ஏசுகிறார். நாளைக்கும் ஏசுவார்.நான் அவருக்கு ஏசுவதில்லை.

அனுரவைப்பற்றி நான் கூறப்போனால் அவர் கட்சியிலும் இருக்கமாட்டார்நாட்டிலும் இருக்கமாட்டார் என்று கூறுகிறார். ரணில் மாத்திரம் அறிந்து வைத்திருக்கும் அனுர தொடர்பான அந்த பாரதூரமான ரகசியம் என்ன?

அந்த ரகசியத்தை ரணில் பாதுகாப்பது ஏன்? அவர் அந்த ரகசியத்தைப் பாதுகாத்து அனுரவிடம் இருந்து எதை எதிர்பார்க்கிறார் ரணில்?

இது பாரதூரமான கூற்று.இதை நாட்டு மக்கள் அறிய வேண்டும்.இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவு என்ன என்று எல்லோரும் அறிய வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு தந்திரோபாயமான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது ஜேவிபி. மக்கள் ஏமாந்துவிட வேண்டாம் ன்று கேட்டுக்கொள்கிறோம்.என்றார்.

# ஆளுநரை தோட்டத்துக்குள் மறைத்துவைத்த ரணில்..

## 93இல் அவர் அமைத்த கேம்..: வாங்கிக் கட்டியும் திருந்தவில்லையே...

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு தன்னாலான அணைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறு ஒத்திப்போடுவதால் அரசுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும் என்றால் பரவாயில்லை.

இது மேலும் மக்களின் எதிர்ப்பை உண்டுபண்ணுமே தவிர ஆதரவைப் அதிகரிக்காது.

இவ்வாறான வேலையைச் செய்யப் போய் அரசு நன்றாக வாங்கிக் கட்டிய வரலாறும் உண்டு.

அந்த வரலாற்றில் அடி வாங்கியது வேறு யாருமல்ல.இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கத்தான்.

அது 1993 இல்....

ரணில் பிரதமர்.டி.பி.விஜயதுங்க ஜனாதிபதி.

அதே வருடம் மே மாதம் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்படுகிறார் ஆர்.பிரேமதாசா.

அவரது இடத்துக்கு–ஜனாதிபதி பதவிக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக நியமிக்கப்படுகிறார் அப்போது பிரதமராக இருந்த .டி.பி.விஜயதுங்க.

பிரதமர் பதவியைக் கைப்பற்றுகிறார் ரணில் விக்ரமசிங்க.

அதுதான் அவர் முதன் முதலாக பிரதமராக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பம்.











இப்போது ஆட்சியை முன்னெடுத்துச் செல்கிறார்கள் ரணிலும் விஜயதுங்கவும் சேர்ந்து...

அப்போதுதான் வருகிறது மாகாண சபைத் தேர்தல்.

ஐக்கிய தேசிய கட்சி அரசை ஆட்டங்காண வைத்த தேர்தல் அது.

அப்போது பிரதான எதிர்க்கட்சி சிறிலங்கா சுதந்திர கட்சி. எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஸ.

ஆனால்,சுதந்திர கட்சியின் ஆட்சியை உருவாக்கும் ஆயுதமாக உருவெடுக்கிறார் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

சுதந்திர கட்சியின் தலைமையில்–சந்திரிக்காவின் தலைமையில் உருவாகிறது பொதுஜன முன்னணி.

தேர்தல் நடக்கிறது.வாரிச் சுருட்டுகிறது சந்திரிகாவின் பொதுஜன முன்னணி.

வயம்பா–மேல் மாகாணம்–தென் மாகாணம் எல்லாம் சந்திரிகா வசம்.

அதிலும் தென் மாகாண சபைதான் பிரச்சினையைக் கிளப்புகிறது. மயிரிழையில்தான் வெல்லுகிறது சந்திரிகா தரப்பு.

ஐக்கிய தேசிய கட்சிக்கு 26 ஆசனங்கள். பொதுஜன முன்னணிக்கு 27 ஆசனங்கள். ஒரு ஆசனம்தான் மேலதிகம்.

இருந்தும்,எப்படியாவது இந்த சபையை கைப்பற்ற வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள் ரணிலும் விஜயதுங்கவும்.

பல சட்ட ஏற்பாடுகளை காட்டி பொதுஜன முன்னணி ஆட்சி அமைப்பதைத் தடுக்கிறது ஐக்கிய தேசிய கட்சி அரசு.

நீதிமன்றம் செல்கிறது இந்த விவகாரம். ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக வருகிறது தீர்ப்பு.பொதுஜன முன்னணி ஆட்சி அமைக்கலாம்.

இருந்தாலும்,நீதிமன்றத் தீர்ப்பின் பிறகும்–தனது குள்ளநரி விளையாட்டைக் கைவிடவில்லை ரணில்.

அடுத்த வியூகம் ஒன்றை வகுக்கிறார்.

ஆட்சி அமைக்கத் தயாராகிறது பொதுஜன முன்னணி.

அமரசிறி தொடங்கொடாதான் முதலமைச்சர்.அதற்காக சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டும்.

அது ஆளுநரின் முன்னிலையில். அப்போது தென் மாகாண ஆளுநர் பாக்கிர் மாக்கார்.

திடீரென ஆளுநரைக் காணவில்லை.

அவரை எங்கோ மறைத்துவிட்டார்கள் ரணிலும் விஜயதுங்கவும்.

இப்போது அவரைத் தேடித் திரிகிறார்கள் அமரசிறி தொடங்கொடாவின் ஆட்கள்.

இறுதியில் கண்டுபிடிக்கிறார்கள் ஆளுநரின் இடத்தை...மறைவிடத்தை...

அது மாத்தறையில்... அவரது தோட்டத்தில்...

அங்கே நுழைகிறார்கள் இவர்கள். அமரசிறி உள்ளிட்ட குழுவினர்.

ஒரே அதிர்ச்சி ஆளுநருக்கு...

“எப்படிக் கண்டுபிடித்தார்கள் ?”

சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்.இப்போதே செய்ய வேண்டும்.

மறுக்கிறார் ஆளுநர்.அது விடுமுறை நாள் என்று கூறி..

இதை அறிகிறார்கள் ரணிலும் விஜயதுங்கவும்.

இப்போது ஆளுநரின் இல்லத்தில் சத்தியப்பிரமாணம் செய்வதற்கான ஏற்பாடு.

அதையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள் ரணிலும் விஜயதுங்கவும்.

ஆளுநரின் வீட்டைச் சுற்றி வீதித் தடைகளை அமைத்து–பொலிஸாரை நிறுத்துகிறார்கள்.

சத்தியப்பிரமாணம் செய்வதற்கு வருகிறார்கள் பொதுஜன முன்னணி உறுப்பினர்கள்.ஆனால்,உள்ளே நுழைய முடியவில்லை.

இதனால் பலவந்தமாக நுழைவதற்கு முடிவெடுக்கிறார்கள்.

அந்தக் குழுவில் எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச–டலஸ் அழகப்பெரும உள்ளிட்டவர்களும்...

இப்போது விதித் தடைகளை உடைத்துக்கொண்டு–பொலிஸாருடன் முட்டி மோதி பலவந்தமாக நுழைகிறார்கள்.

பலவந்தமாகவே சத்தியப்பிரமாணம் செய்கிறார்கள்.

இருந்தும், மூன்றாவது கேமைத் தொடங்குகிறார் ரணில்.

அமரசிறி தொடங்கொட சபையைக் கொண்டு நடத்த முடியாதவாறு பெரும்பான்மையைப் பறிப்பதுதான் அந்த ப்லான்.

ரணிலின் அந்தத் திட்டத்துக்குத் துணை போகிறார் ஓர் உறுப்பினர்.

அவர் லலித்–காமினி கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய பிரியசின்ஸ்க்கு.

இதனால் பெரும்பான்மையை இழக்கிறார் அமரசிறி.

சபையைக் கலைக்கிறார் ஜனாதிபதி விஜயதுங்க.

தேர்தல் நடக்கிறது. ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வி.

அப்படியானதொரு வரலாறுதான் இப்போதும்–இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் நிகழ்ந்து வருகிறது.

அன்று ஆளுநர் பாக்கிர் மாக்காரையும் தென் மாகாண சபை உறுப்பினரையும் மறைத்துவைத்து சபையைக் கலைக்கச் செய்தார் ரணில்.

இதனால் ஐக்கிய தேசிய கட்சி அந்த சபைக்கான அடுத்த தேர்தலில் படுதோல்வியைத்தான் சந்தித்தது.

அதேபோல்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை இராஜினாமா செய்ய வைத்து அவரை சில நாட்கள் தலைமறைவாக்கினார்கள்.

இதன்மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குள் குழப்பம்–பிரிவினை என்று கூறி தேர்தலை ஒத்திவைப்பதுதான் திட்டம்.

இதேவேலையை அன்று–93 ஆம் ஆண்டு பார்த்து நல்ல பாடம் கற்றுக்கொண்ட ரணில் அதே தவறை இப்போதும் செய்யப் பார்க்கிறார்.

வரலாற்றை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தாலும் கூட,வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளும் பழக்கம் ரணிலிடம் இல்லை என்பது தெரிகிறது.

(ஊடகவியலாளர் எம்.ஐ,முபாறக்)

அமரசிறி தொடங்கொடாதான் முதலமைச்சர்.
அதற்காக சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டும்.
அது ஆளுநரின் முன்னிலையில்.
அப்போது தென் மாகாண ஆளுநர் பாக்கிர் மாக்கார்.
திடீரென ஆளுநரைக் காணவில்லை.
அவரை எங்கோ மறைத்துவிட்டார்கள் ரணிலும் விஜயதுங்கவும்.
இப்போது அவரைத் தேடித் திரிகிறார்கள் அமரசிறி தொடங்கொடாவின் ஆட்கள்.
இறுதியில் கண்டுபிடிக்கிறார்கள் ஆளுநரின் இடத்தை...மறைவிடத்தை...
அது மாத்தறையில்...
அவரது தோட்டத்தில்...
அங்கே நுழைகிறார்கள் இவர்கள்.
அமரசிறி உள்ளிட்ட குழுவினர்.
ஒரே அதிர்ச்சி ஆளுநருக்கு...

**“எப்படிக் கண்டுபிடித்தார்கள்?”**

அமரசிறி தொடங்கொட சபையைக் கொண்டு நடத்த முடியாதவாறு பெரும்பான்மையைப் பறிப்பதுதான் அந்த ப்லான். ரணிலின் அந்தத் திட்டத்துக்குத் துணை போகிறார் ஓர் உறுப்பினர்.

அவர் லலித்–காமினி கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய பிரியசின்ஸ்க்கு.

இதனால் பெரும்பான்மையை இழக்கிறார் அமரசிறி.

சபையைக் கலைக்கிறார் ஜனாதிபதி விஜயதுங்க.

தேர்தல் நடக்கிறது. ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வி.

# கோத்தாவின் ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவதற்கு சதி செய்தாரா பசில்?



கோத்தாபாய ராஜபக்ச போராட்டத்துக்குப் பயந்து விலகியது நல்லதா அல்லது விலகாமல் இருந்திருக்க வேண்டுமா?

கோத்தாபய விரட்டப்பட்டது சதியா?

ஆட்சியை வழிநடத்திச் செல்பவர் நீங்கள்தானே?

பசில் தோல்வியடைந்தது எப்படி?

அமெரிக்க பிரஜா உரிமையை கைவிடுவீர்களா?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸ. அவரது பேட்டியின் முழு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : கோத்தாபாய ராஜபக்ச போராட்டத்துக்குப் பயந்து விலகியது நல்லதா அல்லது விலகாமல் இருந்திருக்க வேண்டுமா?**

பதில் : நாம் முடியுமானவரை இந்தப் பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு பாடுபடுவோம். முடியாது போனால் விலக்குவோம் என்றே நாம் தீர்மானித்திருந்தோம்.அதன்படியே நடந்தது.

இந்தப் போராட்டத்தின் ஊடாக வந்தது மக்களின் குரலா -69 லட்சம் மக்களின் குரலா அல்லது வேறு சக்திகளின் குரலா என்று மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சோதித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

**கேள்வி : கோத்தாபய விரட்டப்பட்டது சதியா?**

பதில் : இந்த சம்பவம் இடம்பெறும்போது நான் கோத்தாவுடன்தான் இருந்தேன்.69 லட்சம் மக்கள் ஆணைக்கு எதிராக செயற்பட்ட சர்வதேச சக்தி இதற்கு பின்னால் உண்டு.

இன்னொரு குழுவும் இருந்தது. நாம் பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டியபோது அந்தப் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தவர்கள் அவர்கள்.

அதனால் அவர்கள் எமது ஆட்சி கவிழ வேண்டும் என்று விரும்பினார்கள்.

ஈஸ்டர் தாக்குதல் காரணமாக எம்மீது ஆத்திரமடைந்தவர்களும் இருந்தார்கள்.

கொரோனாவினால் மரணித்தவர்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்காததால் எம்மீது கோபமடைந்தவர்களும் இருந்தார்கள்.

அதேபோல் மூன்றாம் அணியாக நாசகாரக் கூட்டம் ஒன்றும் இருந்தது.

அதேபோல் உண்மையான எதிர்ப்பும் இருந்தது.இயற்கை பசளை போன்ற தீர்மானங்களால்.

**கேள்வி : ஆட்சியை வழிநடத்திச் செல்பவர் நீங்கள்தானே?**

பதில் : ஒருபோதும் இல்லை.ஆட்சி எனது கட்டுப்பாட்டில் இருந்தால் இரட்டை பிரஜா உரிமை சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு அல்லது நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கி இருப்பேனா? அந்தச் சட்டத்தால் எனக்குத்தானே பாதிப்பு.

**கேள்வி : நீங்கள் தோல்வியடைந்த நிதி அமைச்சராக எரிபொருள் வரிசைக்கு நீங்கள் பொறுப்பேற்கத் தயாரா?**

பதில் : முழுமையாக அல்ல. ஒருசில விடயங்களை பாரமேற்கத் தயார்.

**கேள்வி : பசில் தோல்வியடைந்தது எப்படி?**

பதில் : நான் தோல்வியடைந்தவனா இல்லையா என்று மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.நான் நிதி அமைச்சராக இருந்த 8 மாத காலத்துக்குள் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு என்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தேன்.

**கேள்வி : அமெரிக்க பிரஜா உரிமையை கைவிடுவீர்களா?**

பதில் :அரசியலின் ஊடாக மக்களுக்கு சேவை செய்வதற்கு அமெரிக்க பிரஜா உரிமை தடையாக இருந்தால் அதைக் கைவிடுவேன்.

அதுமட்டுமல்ல சட்டரீதியாக என்னவெல்லாம் தடை இருக்குதோ அவற்றையெல்லாம் நீக்குவதற்குத் தயார்.

**கேள்வி : ஆனால்,அமெரிக்காவில் உங்களுக்கு எதிராக பணச்சலவை வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் ஒருபோதும் உங்களால் அமெரிக்க பிரஜா உரிமையை ரத்துச் செய்ய முடியாது என்று விமல் வீரவன்சவும் உதய கம்மன்பிலவும் கூறியுள்ளார்களே?**

பதில் : அப்படியொரு வழக்கு இல்லை. ஓரிரு நாட்களுக்கு முன்தான் நான் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பினேன். எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

**கேள்வி : ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதும் பின்னர் ஜனாதிபதியாக்கியதும் மொட்டு எம்பிக்களின் வாக்குகள்தானே?**

பதில் : அவரை பிரதமராக்கியது நாங்கள் அல்ல.போராட்டக்காரர்கள்.அவர்கள்தான் மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும்.எதிர்க்கட்சியில் இருந்து ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்று கூறினர்.

நாங்கள் மஹிந்தவே பிரதமராக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம்.

மஹிந்தவைத் தவிர வேறு எவரையும் பிரதமராக நியமிப்பதற்கு நாங்கள் விருப்பம் இல்லை என்று உறுதியாகக் கூறினோம்.

கோத்தா அவரது விருப்பந்திப்படிதான் ரணிலை பிரதமராக நியமித்தார்.

மஹிந்தவுக்கு மக்கள் ஆணை இல்லை.அவரை பிரதமர் பதவியில் இருந்து நீக்குங்கள் என்று கோத்தாவுக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. அதனால்தான் அவர் ரணிலை பிரதமராக நியமித்தார்.

அவர் பிரதமராக நியமிக்கப்பட்டமைக்கும் பின்னர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமைக்கும் எங்களுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை.

பின்னர் நாடாளுமன்றின் ஊடாக ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை வந்தபோது அப்போதைய வேட்பாளர்களை ஆராய்ந்து பார்த்து ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் முடிவெடுத்தோம்.

மஹிந்தவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கியமை பிழை.அவர்தான் இப்போதும் பிரதமராக இருந்திருக்க வேண்டும்.

**கேள்வி : உங்கள் கட்சியிலேயே இருந்த டலஸ் அழகபெருமவை நீங்கள் ஏன் ஜனாதிபதியாக்கவில்லை?**

பதில் : அவரால் நாங்கள் எதிர்பார்க்கும் வேலையை செய்ய முடியாது.

**கேள்வி : மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு எரிசக்தி அமைச்சர் முடிவெடுத்துள்ளமை பற்றி...?**

பதில் : நானும் அமைச்சராக இருந்திருந்தால் அதைத்தான் செய்திருப்பேன்.இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகரிக்காமல் இருக்க முடியாது.

என்னால் இதைச் செய்ய முடியாமல் போனதால்தான் நான் விலகினேன்.

**கேள்வி : தேர்தல் நடக்குமா?**

பதில் : தேர்தலை நடத்துவது எங்களது கட்சியின் வேலை இல்லை.அது தேர்தல் ஆணைக்குழுவின் வேலை.இதனால் இது தொடர்பில் எம்மால் எதுவும் சொல்ல முடியாது.தேர்தல் ஆணைக்குழுவிடம்தான் கேட்க வேண்டும்.

**கேள்வி : தேர்தலில் நீங்கள் வெற்றி பெறுவீர்களா?**

பதில் : நாம் அதை மக்களிடம் பாரம் கொடுக்கிறோம். மார்ச் முதலாம் திகதிக்கு பின்தான் என்னால் சரியாகச் சொல்ல முடியும்.வெல்வோமோ.இல்லையா என்று.

**கேள்வி : இந்தத் தேர்தலில் உங்களுக்கு சவாலான கட்சி எது ?**

பதில் : யாரும் எமக்கு சவாலில்லை. நாம் வெற்றிபெறுவோம்.50 வீதத்துக்கு அதிகமான தொகுதிகளை கைப்பற்றுவோம்.

**கேள்வி : 13ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலா மொட்டு கட்சி இருக்கிறது?**

பதில் : மொட்டு அது தொடர்பில் நிலைப்பாட்டுக்கு வரவில்லை.

**கேள்வி : இந்திய ரோ உளவு பிரிவின் பிரதானி உங்களை அண்மையில் சந்தித்தார்.என்ன பேசினீர்கள்?**

பதில் : அவர் சில விடங்களை என்னிடம் கேட்டார்.அது என்னவென்று இங்கே கூறுவது பொருத்தமல்ல.என்றார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியது நாங்கள் அல்ல. போராட்டக்காரர்கள். அவர்கள்தான் மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும். எதிர்க்கட்சியில் இருந்து ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்று கூறினர்.

நாங்கள் மஹிந்தவே பிரதமராக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம்.மஹிந்தவைத் தவிர வேறு எவரையும் பிரதமராக நியமிப்பதற்கு நாங்கள் விருப்பம் இல்லை என்று உறுதியாகக் கூறினோம்.

கோத்தா அவரது விருப்பத்திப்படிதான் ரணிலை பிரதமராக நியமித்தார்.

மஹிந்தவுக்கு மக்கள் ஆணை இல்லை.அவரை பிரதமர் பதவியில் இருந்து நீக்குங்கள் என்று கோத்தாவுக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. அதனால்தான் அவர் ரணிலை பிரதமராக நியமித்தார். அவர் பிரதமராக நியமிக்கப்பட்டமைக்கும் பின்னர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமைக்கும் எங்களுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை.

பின்னர் நாடாளுமன்றின் ஊடாக ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை வந்தபோது அப்போதைய வேட்பாளர்களை ஆராய்ந்து பார்த்து ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் முடிவெடுத்தோம்.

மஹிந்தவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கியமை பிழை. அவர்தான் இப்போதும் பிரதமராக இருந்திருக்க வேண்டும்.




## பெரிய தலையிடி கேஸ்

அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த பந்துல குணவர்தன ஒரு விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அது ஜேவிபி தலைவர் அனுர குமார திஸாநாயக்க,ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசா ஆகியோர் பற்றிய சீரியஸான முறைப்பாடு.

“சேர்..அனுரவும் சஜித்தும் ஐஅக இடம் கடன் வாங்கமாட்டோம் என்று எல்லா இடங்களிலும் சொல்லித் திரியிறாங்க. நாம கடன் வாங்குனா திரும்பிச் செலுத்தமாட்டாங்களாம்.“““

“இது பெரிய தலையிடி கேஸ். ஒருவேள ,ஆட்சி மாறுனா இந்தக் கடன யார் தாரெண்டு ஐஅக யோசிக்கும். அதனால் அவர்கள் கடன் வழங்குவதற்கு தயங்குவார்கள்“““

என்றார் பந்துல பெரிய கவலையுடன்.



## சஜித்தின் மேடையில் 25 பேராசிரியர்கள்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரம் குருநாகலில்தான் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதில் கவனிக்கத்தக்க முக்கிய அம்சம் ஒன்று இருந்தது.அதுதான் 25 பேராசிரியர்கள் அந்த மேடையில் அமர்ந்திருந்தமை.

அப்படியென்றால் சஜித் எப்படிப்பட்ட ஆட்சி ஒன்றுக்குத் தயாராகிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

## சஜித்பற்றி மஹிந்தவிடம் முறைப்பாடு

சஜித் தரப்பு எம்பிக்கள் அவ்வப்போது மஹிந்த ராஜபக்ச,ரணில் விக்ரமசிங்க–மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்களை சந்திப்பது வழக்கம்.

அப்படிச் சந்திக்கும்போது உள்விவகாரங்கள் பலவற்றைப்பற்றைப் பற்றிப் பேசுவார்கள்.

அப்படியான சந்திப்பு ஒன்று மஹிந்தவுடன்..அண்மையில்.

அப்போது மஹிந்த அவர்களிடம் உங்கள் அரசியல் வேலைகள் எப்படிப் போகின்றன என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் “““பரவால்ல சேர்..தலைவர்தான் கொஞ்சம் பிரச்சினை..“““ என்றனர்.அது என்னெவென்று ஆர்வமுடன் வினவினார் மஹிந்த.

கட்சிப் பதவிகளுக்கு யாரையாவது நியமிக்கும்போது செயற்குழுவின் அனுமதியைப் பெறுவதில்லை.அவரின் விருப்பத்தின்படி நியமிக்கிறார்.ஆனால்,ரணில் விக்ரமசிங்க ஒருபோதும் அப்படிச் செய்ததில்லை.அவர் செயற்குழுவின் அனுமதியுடன்தான் நியமிப்பார் என்றனர்.

இவ்வாறு மேலும் பல சிக்கல்கள் இருக்கின்றன.மற்றப்படி வேறு பிரச்சினைகள் ஏதும் இல்லை என்றனர்.

அதெல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை.தலைவருடன் பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள் என்றார் மஹிந்த.





# ஜேவிபியின் கூட்டத்துக்குச் சென்ற மஹிந்த

இப்போதெல்லாம் ஜேவிபியின் கூட்டங்களில் மக்கள் நிரம்பி வழிகிறார்கள். அதனால் மொட்டு கட்சிக்குப் பயம் பிடித்துள்ளது.

இதை மஹிந்தவிடம் கூறினார்கள் அக்கட்சி உறுப்பினர்கள்.

அதற்கு மஹிந்த சொன்னார்.

ஜேவிபியின் பேச்சு கேட்க எல்லோருக்கும் விருப்பம்.அதனால் அவர்கள் கூட்டங்களுக்குச் செல்கிறார்கள்.செல்கின்ற அனைவரும் ஜேவிபிக்கு வாக்குப் போடமாட்டார்கள்.ஒவ்வொரு தேர்தலிலும் இப்படித்தான்.

ஏன் நான்கூட ஜேவிபியின் கூட்டத்துக்குச் சென்றுள்ளேன்.அது ரோஹன விஜயவீர ஜேவிபியின் தலைவராக இருந்தபோது என்றார் மஹிந்த.

## ஏழை விவசாயிக்குத் தலை சாய்த்த அமைச்சர்

கடந்த மாதம் 31ஆம் திகதி விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீராவுக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

அழைப்பை எடுத்தவர் ஒரு விவசாயி.

பணாமுற என்ற இடத்தில் இருந்துதான் அந்த அழைப்பு.

அங்குள்ள கமநல சேவை அலுவலகத்தில் பணிபுரிகின்ற ஓர் அதிகாரி விவசாயிகளுடன் நடந்துகொள்கின்ற முறைபற்றி முறைப்பாடு செய்வதற்காகவே அந்த விவசாயி அந்த தொலைபேசி அழைப்பை எடுத்திருந்தார்.

அவரது முறைப்பாட்டை செவியேற்ற அமைச்சர்.அந்த அதிகாரியை அந்த விவசாயியின் தொலைபேசி ஊடாகவே தொடர்புகொள்வதற்கு முயற்சி செய்தார்

“““ஐயோ அமைச்சரே..என்ட போன்ல பேசாதீங்க.பிறகு என்னால அந்த ஒபீஸ்ல எந்த வேலையும் முடிக்க ஏலாது.நீங்க ஒபிஸ் போனுக்கே எடுங்க..

என்று கூறி அதிகாரியின் விபரத்தை அமைச்சருக்கு வழங்கினார் விவசாயி.


இதனைத் தொடர்ந்து கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்தைத் தொடர்புகொண்டு அந்த அதிகாரிபற்றி முறைப்பாடு செய்தார் அமைச்சர்.

அந்த அதிகாரி தொடர்பில் விசாரித்துப் பார்த்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார் அமைச்சர்.

அவ்வளவுதான்...

இப்போது இடமாற்றப்படவுள்ளாராம் அந்த அதிகாரி.

ஒரு ஏழை விவசாயின் முறைப்பாட்டை செவிமடுத்து உடனே நடவடிக்கை எடுத்த அமைச்சர் பாராட்டுக்குரியவர்.



## தேர்தல் என்றால் இவர்களுக்கும் பயமாம்



தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரச தரப்பினர் ஒன்றன்பின் ஒன்றாக காரணங்களை முன்வைத்துக்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில்,அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் ஒரு காரணத்தை முன்வைத்துள்ளார்.அந்தக் காரணத்தை அவர் ஜனாதிபதியிடமும் கூறியுள்ளார்.

சுற்றுலாவாசிகளை நம்பி தொழில் செய்பவர்கள்,குறிப்பாக தெற்கில் உள்ள சுற்றுலா விடுதி உரிமையாளர்கள் தேர்தலுக்கு அஞ்சுகிறார்களாம்.

தேர்தலுக்கு அதிக பணம் ஒதுக்குவதால் வேறு தேவைகளுக்கு பணம் இல்லாமல் போய் அது மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தினால் சுற்றுலா துறையையும் பாதித்துவிடுமே என்பதுதான் அவர்களின் அச்சமாம்.

இதை அவர்கள் மனுஷவிடம் கூற,மனுஷ அப்படியே அதை ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

ஆக,ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடுவதற்கான காரணங்களை இவர்களே எடுத்துக் கொடுக்கிறார்கள்.

- சமஸ்டி ஆட்சி முறைமையை நீங்கள் கேட்கிறீர்கள்.சமஸ்டி ஆட்சி முறைமை என்பது என்ன?
- நீங்கள் பொலிஸ் அதிகாரம் கேட்பது ஏன்?
- நீங்கள் கேட்பது புலிகள் கேட்ட தமிழீழம் போன்றதா?
- புலிகள் சிறுவர்கள் முதல் மக்களை கொலை செய்ததை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?
- நீங்கள் சமஸ்டி கேட்கிறீர்கள்.அப்படியென்றால் கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் நிலைமை என்ன?

# முஸ்லிம் ஆண்கள் பர்தாவை அணிந்துகொண்டு புலிகளை காட்டிக்கொடுத்தார்கள்



**தெற்கில் இருந்த தமிழர்கள் 58 களில்-71 இல்..83 இல் அடித்து விரட்டப்பட்டார்கள். அப்படி விரட்டிவிட்டு இப்போது சொல்கிறார்கள். நாம் எல்லோரும் ஒன்றுதானே. நாம் வடக்கிற்கு வரமுடியும். நீங்கள் தெற்கிற்கு வர முடியும் என்று சொல்கிறார்கள். முதலில் நாம் இருக்கின்ற இடத்தில் வாழ்கின்ற உரிமையை வழங்க வேண்டும். அதற்கு பின் இதுபற்றிப் பேசலாம்.வடக்கில் உள்ள ஒருவர் தெற்கில் போய் வீடு வாங்க முடியுமா? ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளம்புவார்கள்.**

இவ்வாறு மேலும் பல கேள்விகளுக்கு பதில் வழங்குகிறார் நாடாளுமனற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.அவரது பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : பௌத்த தேரர்கள் போராட்டங்களில்-அரசியலில் ஈடுபடுவது சரியா?**

பதில் : இல்லை.அது பிழை.அது அவர்களின் வேலை இல்லை.தேரர்கள் அவர்களின் மத வேலைகளை மாத்திரமே பார்க்க வேண்டும்.வீதிகளில் இறங்கிப் போராடி-அரசியல் செய்து அவர்களின் பெயர்களுக்கு-அவர்களின் மதத்துக்கு இழுக்கை ஏற்படுத்தக்கூடாது.

வடக்கு-கிழக்கில் இந்து பூசாரிகள் இப்படி அரசியல் வேலைகள் செய்வதில்லை. அவர்கள் கோயிலில் இருக்கிறார்கள். சமய அனுஷ்டானங்களை மாத்திரம் செய்கிறார்கள்.

வரலாற்றில் மத குருமார்கள் இவ்வாறு வீதிக்கு இறங்கிப் போராடியதால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகி இருக்கின்றன.

அப்படி இல்லாவிட்டால் காவி உடையைக் களைந்து வைத்துவிட்டு இந்த வேலைகளை செய்யலாம்.

**கேள்வி : இந்த நாட்டு மக்களுடன் ஒன்றிணைத்து வாழ விருப்பமில்லாது நீங்கள் தனியான ஒரு நாட்டை கேட்கிறீர்கள் என்று சிங்கள மக்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.இது சரியா?**

பதில் : 1948இல் இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கும்போது நாட்டின் முழு அதிகாரத்தையும் சிங்கள மக்கள் எடுத்துக்கொண்டார்கள்.இன்றுவரை அது பகிரப்படவில்லை.இதனால் அன்றிருந்து இன்றுவரை அதிகாரத்தைப் பிரிக்குமாறு நாம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்.இதனால்தான் இந்தப் பிரச்சினை.

1956 இற்கு முதல் நாம் ஒன்றாகத்தான் இருந்தோம்.சிங்கள-தமிழ்-முஸ்லிம் என்ற பேதம் இருக்கவில்லை.

56 இல் சிங்கள மொழி மட்டும் அரச மொழி என்ற சட்டம் கொண்டுவரப்பட்டதால் நாம் பிரிந்தோம்.வடக்கு-கிழக்கிற்கு தமிழ் மொழியைக் கேட்கத் தொடங்கினோம்.

56 இற்கு முதல் இருந்தும் பிரச்சினை இருந்தது.டி.எஸ்.சேனநாயக்கவின் ஆட்சியின்போது வடக்கு-கிழக்கில் வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்களவர்களுக்கு காணி வழங்கியபோதும் பிரச்சினை ஏற்பட்டது.

அரசு காணிகளை வழங்கும்போது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும்.அதை அப்போதைய அரசு செய்யவில்லை.இதனாலும் பிரிவினை ஏற்படத் தொடங்கியது.

இருந்தாலும் 56 தனிச் சிங்கள சட்டம் ஊடாகத்தான் பிரிவி விசாலமானது.

**கேள்வி : வடக்கில் உள்ளவர்கள் தெற்கில் எங்கும் வாழலாம்.அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஏன் தெற்கு சிங்களவர்கள் மட்டும் வடக்கில் வசிக்க முடியாது ?**

பதில் : அப்படி அங்கு வரமுடியாது என்று நாம் சொல்லவில்லை.56இற்கு முன் நாம் ஒன்றாகத்தான் வாழ்ந்தோம்.

ஆனால்,தெற்கில் இருந்த தமிழர்கள் 58 களில்-71 இல்..83 இல் அடித்து விரட்டப்பட்டார்கள்.அப்படி விரட்டிவிட்டு இப்போது சொல்கிறார்கள்.நாம் எல்லோரும் ஒன்றுதானே.நாம் வடக்கிற்கு வரமுடியும்.நீங்கள் தெற்கிற்கு வர முடியும் என்று சொல்கிறார்கள்.

முதலில் நாம் இருக்கின்ற இடத்தில் வாழ்கின்ற உரிமையை வழங்க வேண்டும். அதற்கு பின் இதுபற்றிப் பேசலாம்.

வடக்கில் உள்ள ஒருவர் தெற்கில் போய் வீடு வாங்க முடியுமா?ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளம்புவார்கள்.

பானந்துறையில் உள்ள கோவில் பூசாரி சொல்கிறார்.எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்று.

**கேள்வி : சமஸ்டி ஆட்சி முறைமையை நீங்கள் கேட்கிறீர்கள்.இதனால் தனி நாடு கேட்கிறீர்கள் என்று சிங்கள மக்கள் கூறுகிறார்கள்.உண்மையில் சமஸ்டி ஆட்சி முறைமைஎன்பது என்ன?**

பதில் :ஒற்றுமை என்பதுதான் சமஸ்டி முறைமை என்பது.அந்தந்த பகுதிகளில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கும்போது அது ஒற்றையாட்சி.

உதாரணத்துக்கு 10 ஏக்கர் நிலத்தில் தாய் வீடு ஒன்று இருக்கிறது.அந்த வீட்டில் நான்கு பிள்ளைகள்.அவர்கள் ஒருவருக்கும் தனித்தனியாக நிலம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

அவர்கள் அதில் வீடு அமைத்து விரும்பிய பயிர்களை செய்து வாழ்கிறார்கள்.ஆனால்,தாய் வீட்டில் தாய்,தந்தை இருப்பார்கள்.

இந்த நான்கு பிள்ளைகளும் தனித்தனியாக வீடு அமைத்துத் தோட்டம் செய்து வந்தாலும் நால்வரும் தாய் வீட்டுக்குச் சொந்தக்காரர்கள்.

அதுதான் சமஸ்டி என்பது.

இந்த விடயத்தில் தெற்கில் வேறாகவும் வடக்கில் வேறாகவும் நடத்துகிறார்கள்.

மாகாண சபையில் தெற்கில் இருக்கும் முதலமைச்சர்கள் நிதியை வைத்திருக்க முடியும்.வடக்கு முதலமைச்சராக நான் இருந்தபோது அந்த உரிமை எனக்கு வழங்கப்படவில்லை.

வடக்கில் எதாவது பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கும்போது தடை விதிக்கிறார்கள். ஏதாவது காரணத்தைச் சொல்லி.

ஆனால்,அதிகாரம் எங்களிடம் இருந்தால் நாங்கள் அதைச் செய்துகொள்வோம்.இதற்காகத்தான் சமஸ்டியைக் கேட்கிறோம்.

**கேள்வி : நீங்கள் பொலிஸ் அதிகாரம் கேட்பது ஏன்?**

பதில் : அங்கே சிங்கள பொலிஸாா்தான் இருக்கிறார்கள்.இதனால் மொழிப் பிரச்சினை ஏற்படுகிறது.

ஒருவர் பொலிஸ் நிலையம் சென்று தமிழில் முறைப்பாடு பதிவு செய்கின்றபோது சிங்களத்தில் ஒருவர் மொழிபெயர்த்து சொல்கிறார்.

இதனால் இவர் கூறிய அத்தனை விடயங்களும் திரிவுபடுத்தப்படுகின்றன.இதனால் முறைப்பாட்டாளர் பாதிக்கப்படுகிறார்.

**கேள்வி : இதுபோன்ற சிறிய நாட்டுக்குள் சமஸ்டி தேவைதானா?**

பதில் : சுவிஸ்டார்லாந்த் இலங்கையில் மூன்றில் ஒரு பங்கு.அங்கு பத்து மக்கள் பிரிவுகள் உள்ளனர்.அவர்கள் அவர்களை அவர்களாவே நிர்வகிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.ஆனால்,அந்த நாடு துண்டு துண்டாகப் பிரிந்து செல்லவில்லை.

அங்கு 20 மாகாணங்கள் உள்ளன.இங்கு இருப்பதோ ஒன்பது.

அந்த நாட்டால் இது முடியும் என்றால் ஏன் இலங்கையால் முடியாது?நாம் நாட்டை பிரிக்கச் சொல்லவில்லை. அதிகாரத்தைத்தான் பகிரச் சொல்கிறோம்.

**கேள்வி : நீங்கள் கேட்பது புலிகள் கேட்ட தமிழீழம் போன்றதா?**

பதில் :இல்லை.அவர்கள் கேட்டது தனியான ஒரு நாடு.நாம் கேட்பது அப்படியல்ல.நாட்டைப் பிரிக்காமல் அதிகாரத்தை மட்டும் பகிர்ந்து கேட்கிறோம்.

அமரிக்கா,கனடா,இந்தியா போன்ற நாடுகள் சமஸ்டி ஆட்சி முறையைக் கொண்ட நாடுகள்.

அவை தனிநாடாகப் பிரியவில்லை.

ஆனால்,இந்த சமஸ்டி முறையை தனி நாடு என்றே எல்லோரும் எண்ணி இருக்கிறார்கள்.

**கேள்வி: தமிழ் டயஸ்போராக்களை வைத்து வடக்கை உங்களால் அபிவிருத்தி செய்ய முடியாதா?**

பதில் : முடியும்.ஆனால்,அவர்கள் பாதுகாப்பு உத்தரவாதத்தைக் கேட்கிறார்கள். அவர்கள் முதலீடு செய்த பின் புலி என்று கூறி இந்த அரசு அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்தால் என்ன செய்வது?

வேண்டிய அளவுக்கு முதலீட்டாளர்கள் உள்ளார்கள்.ஆனால்,பிரச்சினை இதுதான். எம்மிடம் அதிகாரம் இருந்தால் இதை இலகுவாக செய்வோம்.

**கேள்வி : புலிகள் சிறுவர்கள் முதல் மக்களை கொலை செய்ததை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

பதில் : அரசு செய்யவில்லையா அப்படி? போரில் எல்லாம் நடக்கத்தான் செய்யும்.இருந்தாலும் இதை ஆரம்பித்து வைத்தது அரசுதான்.

ஒரு லட்சத்துக்கும் அதிகமான படையினர் வடக்கில் உள்ளனர்.எமது அன்றாட செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

தெற்கில் இருந்து வரும் சிங்களவர்களுக்கு இடங்களை கொடுக்கின்றனர்.

இப்படி அதிகமான விடயங்கள் நடக்கின்றன அங்கு.

**கேள்வி : நீங்கள் சமஸ்டி கேட்கிறீர்கள்.அப்படியென்றால் கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் நிலைமை என்ன?**

பதில் : அவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.அவர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.நான் அப்போதே இதுபற்றி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் அஸ்ரபிடமும் கூறி இருக்கிறேன்.

**கேள்வி : பிரபாகரன் ஏன் முஸ்லிம்களை வடக்கில் இருந்து விரட்டினார்.?**

பதில் : அதற்கு ஒரு காரணம் உண்டு.புலிகள் செல்லும்போது அவர்கள் இராணுவத்தால் கூண்டோடு பிடிக்கப்படுவார்கள்.

இது எப்படி சாத்தியம் என்று புலிகள் தேடிப் பார்த்தார்கள்.அப்படி பார்க்கும்போது ஒரு விடயம் தெரிய வந்தது.

பர்தாவை போத்திக்கொண்டு பெண்கள் பஸ் நிலையத்துக்குச் செல்வார்கள். அவர்கள்தான் அங்கிருந்து படையினருக்கு துப்புக் கொடுத்தனர்.

பிறகு பார்த்தால் அவர்கள் பெண்கள் இல்லை.ஆண்கள்.

இவர்களை எப்படி வைத்துக்கொண்டிருப்பது? அதனால்தான் புலிகள் அவர்களை அனுப்பினார்கள். அவர்களை கொல்லவில்லை. ஆனால்,அவர்களின் நிலம் அப்படியே இருக்கிறது.அவர்கள் போய் அதில் இருக்கலாம்.

# Nostro கணக்கைத் திறந்துள்ள கொமர்ஷல் வங்கி

116 வருடங்கள் பழமையான இந்தியன் வங்கி மும்பாயில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் கொமர்ஷல் வங்கி இந்திய நாயணத்தில் ழேளவசழ கணக்கைத் திறந்துள்ளதாக அறிவித்துள்ளது.

சார்க் பிராந்தியத்தில் வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க இந்திய நாணயத்தை ஒரு வெளிநாட்டு நாணயமாக இலங்கை மத்திய வங்கி வகைப்படுத்தியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

இந்திய நாணயத்தில் ழேளவசழ கணக்கை ஸ்தாபித்துள்ளதன் மூலம் இலங்கை மற்றும் இந்திய ஏற்றுமதி இறக்குமதியாளர்கள், இரு தரப்புக்கும் நன்மை அளிக்கும் வகையில் இந்திய ரூபாயில் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வங்கி வழியமைத்துள்ளது.

இந்த நடவடிக்கை பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கி முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க “இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கியுள்ள சவால்களின் பின்னணியில், வர்த்தக செயற்பாடுகளுக்காக இந்திய ரூபாயை வசதியாகப் பாவிக்க முடியுமான நிலை இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக அளவை மேலும் அதிகரிப்பதற்கும், முன்னேற்றகரமான பிராந்திய ஒத்துழைப்புக்குமான காலத்துக்கு ஏற்ற நடவடிக்கையாக இருக்கும். என்றார்.

# வெற்றிகரமாக நிறைவடைந்த SLIIT இன் ICAC 2022



தேசிய பொருளாதார செழிப்பை நோக்கி கணினியியலின் முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கிலான 04வது சர்வதேச மாநாடு 2022 (ICAC) முடிவடைந்தது.

கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற களங்களில் சமீபத்திய கண்டுபிடிப்புக்கள், ஆராய்ச்சி வெளியீடுகளை முன்வைத்து தொழில் வல்லுனர்களுடன் கல்வியாளர்களுக்கு ஒரு திறந்த தளமொன்றை ஏற்படுத்துவதே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

இந்த நிகழ்ச்சியை உயிரூட்டும் வகையில் Center of Excellence in Cybersecurity Research, Education, and Outreach (CREO) இன் பணிப்பாளர் பேராசிரியர் ஹொசேன் சராஃப்சடேன், தற்போதைய உலகளாவிய விடயங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவமான விடயங்களில் காணப்படும் சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், உலகளாவிய ரீதியில் காணப்படும் ஆபத்தைக் குறைப்பதற்கான ஆய்வுகள் பற்றி பிரதான உரை நிகழ்த்தினார்.



# சன் லங்கா நிறுவனத்தின் ஊழியர்களுக்கு AIA இந்த ஆரோக்கியக் காப்புறுதி

சன் லங்கா பிறைவட் லிமிட்டட் நிறுவனத்தின் சிரேஷ்ட மேலாண்மை அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஏதேனும் ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏற்படும் போது அவர்களின் நிதியியல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பரிபூரணமான ஆரோக்கியக் காப்புறுதித் திட்டங்களை யுஐயுஇன்ஷ்ரன்ஸ் வழங்கியிருக்கின்றது.

இன்று ஆரோக்கியக் காப்புறுதித் திட்டங்கள் இன்றியமையாதது மட்டுமின்றி அனைத்துக் குடும்பங்களுக்கும் மிகவும் பிரதானமான ஒரு அம்சமாகவே இருக்கின்றது. மேலும் நாம் எப்போதும் எங்களுடைய ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானதுமாகும்.

முன்னெப்போதையும் விட இப்போது ஆரோக்கியமாக இருப்பது மிகவும் அத்தியவசியமானதொன்றாகவே இருக்கின்றது. இதனாலேயே சன் லங்கா நிறுவனத்தின் ஊழியர்களின் ஆரோக்கியத்தில் மிகவும் கவனம் செலுத்துவதற்காகத் தனித்துவமான ஆரோக்கிய அனுகூலங்களுடன் பரிபூரணமான ஆரோக்கியக் காப்புறுதித் திட்டங்களை யுஐயு அதன் ஊழியர்களுக்கு வழங்குகின்றது.

ஊழியர்களைப் பாதுகாப்பதற்காக பல்வேறுபட்ட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு அனுகூலங்களை வழங்குவதுடன், பணமற்ற வைத்தியசாலை அனுமதிக் காப்பீடு, நாளொன்றுக்கான வருமான அனுகூலம், பாரதூரமான நோய் அனுகூலம், சத்திரசிகிச்சைக் காப்பீட்டுடனான ஆயுள் காப்புறுதிக் காப்பீடு மற்றும் விபத்து மரண அனுகூலம் ஆகியவற்றை யுஐயு இனுடைய ஆரோக்கியக் காப்புறுதித் திட்டம் வழங்குகின்றது.







# மகளிர் T20 உலகக் கிண்ணம் 2023: அனுசரணை சைக்கள் அகர்பத்தி

இந்தியாவின் NR குழுமத்துக்கு சொந்தமான சைக்கள் பியோர் அகர்பத்தி - Cycle Pure Agarbathi –தென் ஆபிரிக்காவில் இடம்பெறவிருக்கும் icc மகளிர் T20 உலகக் கிண்ணம் 2023: போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை கிரிக்கட் அணியினருக்கான உத்தியோகபூர்வ அனுசரணை வழங்குகிறது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை கிரிக்கட் அணியின் உதவிச் செயலாளர் – திரு.கிரிஷாந்த கபுவத்த, இலங்கை மகளிர் கிரிக்கட் அணியின் தலைவர் – சாமரி அதபத்து மற்றும் அவரது அணி அங்கத்தவர்கள் (SLC)) மற்றும் அர்ஜுன் ரங்கா – முகாமைத்துவ பணிப்பாளர் - Cycle Pure Agarbathi ஆகியோரும் கலந்துகொண்டார்.

இலங்கை மகளிர் அணியினரின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் என்ற வகையில் Cycle Pure Agarbathi வர்த்தகக் குறியீடு இலங்கை அணியினரின் ஜேர்சியின் வலது கையில் பொறிக்கப்பட்டிருக்கும்.

Cycle Pure Agarbathiயின் முகாமைத்துவப் பணிப்பாளர் – திரு. அர்ஜுன் ரங்கா ஊடகவியலாளர் மாநாட்டின் போது கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை மகளிர் கிரிக்கட் அணியினருடனான இந்த கூட்டிணைவின் மூலம் ஒற்றுமை, பிரார்த்தனை மற்றும் நம்பிக்கை என்ற செய்தியினை நாட்டை சர்வதேச மைதானங்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் மகளிர் அணிக்கு மட்டுமல்லாது நாட்டின் அனைவரின் மத்தியிலும் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.“ எனத் தெரிவித்தார்.




# OPPO A17 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள்



OPPO உடன் அபான்ஸ் இணைந்து OPPO A Series அணிவகுப்பின் புதிய தயாரிப்பான OPPO A17 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை விற்பனை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

இந்த அறிமுக நிகழ்வு பெப்ரவரி 01 ஆம் திகதி Courtyard by Marriott Colombo ஹோட்டலில் நடைபெற்றது.அதேபோல் இத்தருணத்தில் OPPO இலங்கைக்கான தேசிய விநியோகஸ்தராக அபான்ஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டது இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

2015ஆம் ஆண்டு முன்னணி ஸ்மார்ட் சாதனமாக இலங்கை சந்தைகளில் அறிமுகமாகிய OPPO ஸ்மார்ட் தயாரிப்புகள் அதிநவீன சிறப்பம்சங்கள் அடங்கிய தனித்துவமான உற்பத்திகளை தன்வசம் கொண்டுள்ளது. இலங்கை விற்பனை சந்தைகளில் நிலையான ஒரு விற்பனை நாமமாக OPPOதனது ஸ்தீரத்தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது.

Abans விநியோகிக்கும் புதிய A17 Series OPPO ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளில், 50MP பிரதான கேமரா, நீடித்துழைக்கும் பேட்டரி, ColorOS 12.1 Operating System ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

Ultra-Slim Body மற்றும் faux Leather நிறைவைக் கொண்டுள்ள புதிய OPPO A17 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியானது தட்டையான மற்றும் மென்மையான வலைவுடன், மெல்லிய வடிமைப்பைக் கொண்டுள்ளதோடு, Lake Blue மற்றும் Midnight Black வர்ணங்களில் கிடைக்கிறது. சுமார் 8.29MM தடிப்பத்திலான இதன் எடை தோராயமாக 189g ஆக இருப்பதால் கொண்டு செல்வது மிகவும் சுலபமாகும்.

உண்மை, உண்ணதம், தெளிவு......
இலங்கையின் தனித்துவமான ”உண்மைக்கே முதலிடம்”
www.puthusudar.lk